**குன்றத்தூர் நகராட்சி ஆணையர் (பொ)அவர்களின் செயலாணைகள்**

**பிறப்பிப்பவர் : திருமதி.மு.ராணி, எம்.ஏ.,**

**ந.க.எண்.1612/2025/எப்1** **நாள்.13.06.2025**

**பொருள்:-** மனை உட்பிரிவு அங்கீகாரம் – காஞ்சிபுரம் மாவட்டம் – குன்றத்தூர் நகராட்சி – குன்றத்தூர் ஆ கிராமம் – நில அளவை எண்.673/54, 673/55 & 678/2A-ல் அடங்கிய 919 ச.மீ. பரப்பளவில் மனை உட்பிரிவு செய்தல் – அங்கீகாரம் வழங்குதல் – சார்ந்து.

**பார்வை :-**

1) உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும கடிதஎண்.CMDA/PP/Layout-1/0039/2025 நாள்.08.05.2025

2) மனைஉட்பிரிவு கட்டணம் ரூ.53500/- (செலுத்துச்சீட்டு எண்.179/001/1/25-26/0003678 நாள்.11.06.2025)

3) தொடர்புடைய ஆவணங்கள்.

*********

குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட குன்றத்தூர் ஆ கிராமம், நில அளவை எண்.673/54, 673/55 & 678/2A-ல் அடங்கிய 919 ச.மீ. பரப்பளவில் மனை உட்பிரிவு செய்ய M/s.Urban Tree Real Estates LLP rep. by Mr.Abhinay Mehta, GPA on behalf of M/s.Capital One Constructions Pvt Ltd என்பவரால் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு விண்ணப்பிக்கப்பட்டு, பார்வை 1ல் காணும் உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும கடிதத்தின்படி மேற்படி நில அளவை எண்ணில் **8** மனைகளாக மனை உட்பிரிவு செய்து **P.P.No.OL-01774** என எண்ணிடப்பட்டு **நாள்.08.05.2025-ல்** மனைஉட்பிரிவுக்கு திட்ட அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து மனைஉட்பிரிவு அங்கீகார கட்டணமாக ரூ.**53500**/-ஐ பார்வை 2ல் காணும் விவரப்படி செலுத்து சீட்டு மூலம் வசூலிக்கப்பட்டுள்ளது.

குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட குன்றத்தூர் ஆ கிராமம், நில அளவை எண்.673/54, 673/55 & 678/2A-ல் அடங்கிய 919 ச.மீ. பரப்பளவில் **8** மனைகளாக (மனை எண்.1 முதல் 8 வரை) உட்பிரிவு செய்து மேற்படி நிலத்தின் உரிமையாளர் **M/s.Urban Tree Real Estates LLP rep. by Mr.Abhinay Mehta, GPA on behalf of M/s.Capital One Constructions Pvt Ltd** என்ற பெயரில் மனைஉட்பிரிவு அனுமதி எண்.**13/2025-2026** என எண்ணிட்டு கீழ்க்காணும் நிபந்தனைகளுடன் மனைஉட்பிரிவு அங்கீகாரம் அளித்து உத்தரவிடப்படுகிறது.

**நிபந்தனைகள்**

1 சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும திட்ட அனுமதி எண். **P.P.No.OL-01774 நாள்.08.05.2025ல்** தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை தவறாது கடைபிடித்தல் வேண்டும். தவறும் பட்சத்தில் மனை உட்பிரிவு அங்கீகாரம் ரத்து செய்யப்படும்.

2 இத்துடன் இணைக்கப்பட்டுள்ள சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் மனைஉட்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள விவரப்படி மனைகள் பிரித்து மாற்றம் செய்யாமல் விற்பனை செய்தல் வேண்டும் மற்றும் மனைஉட்பிரிவு வரைபடத்தில் தெரிவித்துள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டும்.

3 இந்த ஆணை தணிக்கைத்தடைக்கு உட்பட்டதாகும்.

4 மனை உட்பிரிவு தொடர்பான இடத்தில் (புல எண்ணில்) உரிமை பிரச்சினை வருமேயானால் தாங்களே சிவில் / குற்றவியல் நீதிமன்றத்தில் தீர்வு பெற்றுக்கொள்ள வேண்டும். எந்த சூழ்நிலையிலும் நகராட்சி, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் பொறுப்பேற்காது.

5 தவறான ஆவணம் சமர்ப்பித்து அனுமதி பெறப்பட்டது பின்னர் தெரியவந்தால் எந்த நேரத்திலும் வழங்கப்பட்ட உத்திரவு இரத்து செய்யப்படும்

13/6/25

ஆணையர் (பொ)
குன்றத்தூர் நகராட்சி

13/6/25

**இணைப்பு :-**
அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்கள்

**பெறுநர்:-**

1. **M/s.Urban Tree Real Estates LLP rep. by Mr.Abhinay Mehta, GPA on behalf of M/s.Capital One Constructions Pvt Ltd,**
   No.8., Rutland Gate, 5th Street, Nungambakkam, Chennai 600006
2. வருவாய் ஆய்வாளர், குன்றத்தூர் நகராட்சி,
   (காலிமனை வரி தொடர்ந்து வசூலிக்க இதன்மூலம் உத்தரவிடப்படுகிறது)

**நகல் :-**

1. உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம், எழும்பூர், சென்னை – 8
2. வட்டாட்சியர், வருவாய்த்துறை, குன்றத்தூர்
3. நகராட்சி பொறியாளர், குன்றத்தூர் நகராட்சி
   (சாலைப்பதிவேட்டில் பதிந்து உரிய நடவடிக்கைக்கு)